

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பொதட்டூர்பேட்டை பேரூராட்சி 3 வது வார்டு திமுக கவுன்சிலர் அனுசுயா – சிவா இல்ல பிறந்தநாள் விழா நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் கலந்துகொண்டு குழந்தையை வாழ்த்தினார். உடன் பேரூர் செயலாளர் டி.ஆர்.கே.பாபு, நிர்வாகிகள் உதயசூரியன், ஜி சித்திஅலி, என்.எஸ். மோகன், சஞ்சய் காந்தி, சுகுமார், கோகுல், சத்யா மற்றும் பலர் உள்ளனர்.

### கோவை மாவட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள்

# சாலை, பாலப்பணிகளை முடிக்க முடியாமல் திணறல்!

## ஒப்பந்ததாரர்களை கை காட்டும் நெடுஞ்சாலைத்துறை!

கோவை, ஜுன் 8-

கோவை மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறையில் குரும்பபாளையம் சாலை அகலமாக்கும் பணி கடந்த ஆண்டு ஜுலை 22ம் தேதி துவக்கப்பட்டது. இந்த பணி வரும் ஜுலை 22ம் தேதி முடிக்கப்பட வேண்டும். ஆனால் இது வரை 60 சதவீத பணிகள் மட்டுமே முடிந்துள்ளது, இன்னும் 40 சதவீத பணிகள் முடிய மேலும் 6 மாதகாலம் ஆகி விடும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

சங்கனூர்பள்ளம் பாலம் அமைக்கும் பணி 15.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடந்த மே மாதம் 27ம் தேதி துவக்கப்பட்டது. துவக்கிய பின் பணிகள் நடைபெற வில்லை,

கணபதி மோர் மார்க் கெட் அகலமாக்கும் பணி ரூபாய் 51.02 கோடி மதிப் பீட்டில் கடந்த 29.08.2025ம் தேதி துவங்கியது. இந்த பணிகள் இதுவரை 6 சதவீ தம் மட்டுமே முடிவு பெற் றுள்ளது. வரும் நவம்பர் 26ம் தேதிக்குள் இந்த சாலை விரிவாக்க பணி களை செய்து முடிக்க ஒப் பந்தம் விடப்பட்டது. ஆனால் மேலும் ஒரு ஆண்டு ஆகி விடும் வாய்ப்பு இருக் கிறது.

பெரியநாயக்கன்பாளை யம் அணுகு சாலை அமைக் கும் பணி 8.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 05.12.2025ம் தேதி துவங்கப் பட்டது, இந்த பணியை கடந்த மாதம் 6ம் தேதியே முடித்திருக்க வேண்டும். ஆனால் இதுவரை கஷ்டப் பட்டு 20 சதவீத பணியை மட்டுமே முடித்திருக்கி றார் கள்.

காந்தையாற்றின் குறுக்கே 18.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10.02. 2023ம் தேதி பாலம் கட்டும் பணி துவங்கியது. கடந்த ஆண்டு 09.02.2025ம் தேதி பணியை முடித்திருக்க வேண்டும். ஆனால் இது வரை 72 சதவீத பணிகள் மட்டுமே முடிக்கப் பட்டுள்ளது.

நீலிக்கோணம்பாளை யம் எஸ்ஐஎச்எஸ் குடி யிருப்பு மேம்பாலம் பணி 73.09 கோடி ரூபாய் மதிப் பீட்டில் துவக்கப்பட்டது. இதில் 6,114 சதுர மீட்டர் நிலம் கையகப்படுத்த வேண்டும். இதுவரை 5,927 சதுர மீட்டர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது. 186 சதுர மீட்டர் நிலம் கையகப் படுத்துவதில் தாமதமாகி வருகிறது. இன்னொரு பகு தியில் 7,009 சதுர மீட்டர் நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. கரவழி மாதப்பூர் மேம்பாலம், சேடபாளையம் ரயில்வே பாலபணிகள் 75 சதவீதம் மட்டுமே முடிந்துள்ளது.

வடகோவை மருதமலை சாலை அகலமாக்கும் பணி 10 சதவீதம் மட்டுமே முடிக் கப்பட்டு நீண்ட காலம் தாமதமாகி வருகிறது. மாவட்ட அளவில் மாநில, தேசிய நெடுஞ்சாலை பணி கள் தாமதமாக நடக்க அலட்சியமான செயல்பாடு தான் முக்கிய காரணமாக இருக்கிறது.

உரிய காலத்திற்குள் பணி களை முடிக்கா விட்டால் நடவடிக்கை எடுக்க வேண் டும். ஒப்பந்த காலத்திற்குள் முடிக்காத நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் வழங்க கூடாது என மக்கள் கடும் எதிர் பார்ப்பு தெரிவித்துள்ளனர். பணிகள் தாமதமாகி வருவ தால் மக்கள் கடும் போக்கு வரத்து நெரிசலில் தவித்து வருகின்றனர். கோவையில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திட்ட பணிகள் தொடர்பாக ஆய்வு நடத்தி னார். ஆனால் அவர் பணி கள் காலதாமதமாகி வரும் பகுதியை பார்வையிட செல்லவில்லை. அவினாசி ரோடு. மதுக்கரை நீலாம் பூர் பைபாஸ் சாலையை பார்வையிட்டார். திட்ட பணிகள் காலதாமத விவகா ரம் குறித்து எந்த கேள்வியும் கேட்காமல் அடுத்ததிட்டம் என்ன என அதிகாரிகளிடம் விசாரித்து அவசர கதியில் சென்று விட்டார்.

அமைச்சர் ஆய்விற்கு பின்னரும் எந்த பணிகளி லும் முன்னேற்றம் இல்லாத தால் மக்கள் மத்தியில் விரக்தி நிலவுகிறது.

இது தொடர்பாக நெடுஞ் சாலைத்துறையினர் கூறுகை யில், "குறிப்பிட்ட சிலதிட்ட பணிகள் தாமதம் காரண மாக அந்த ஒப்பந்த நிறுவ னங்களுக்கு அபராதம் விதிக் கப்பட்டது. சாய்பாபா குடி யிருப்பு மேம்பாலம் திறப்பு விழாவிற்கு தயாராகி வருகி றது. அந்த பாலபணிகள் உரிய கால அவகாசத்திற் குள் முடிக்கப்படும் நிலை யில் இருக்கிறது. இதர பகுதி களில் பணிகளை வேகப் படுத்தி இருக்கிறோம். தேர் தல் காரணமாக 2 மாதம் பணிகள் பாதிக்கப்பட்டி ருந்தது," என்றனர்.

### கோவை மாநகரில் கடந்த 5 மாதத்தில்

# பெண்களுக்கு எதிராக 155 குற்ற வழக்குகள் பதிவு!

## பொதுமக்களிடையே கடும் அதிர்ச்சி!

கோவை, ஜுன் 8-

கோவையில் போதைப் பொருள் மற்றும் கஞ்சா விற்பனையை ஒழிக்க காவல் துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வரு கின்றனர். மாநகர காவல் துறை கண்காணிப்பாளர் கண்ணன் உத்தரவின் பேரில் காவல் துறையினர் மாநகரில் ரோந்து மற்றும் கண்காணிப்பு பணியை முடுக்கி விட்டுள்ளனர். இவர்கள் தவிர மது விலக்கு, அமலாக்க துறை போலீசா ரும் சோதனை நடத்தி வரு கின்றனர்.

தொழில் நகரமான கோவையில் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களை சேர்ந்தவர்க ளும் கல்வி, தொழில், வேலை வாய்ப்பு உள் ளிட்ட பல காரணங்களுக் காக தங்கி உள்ளனர். நகரில் மக்கள் தொகைக்கு ஏற்ப குற்றச் சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, கல் லூரி பகுதிகளில் மாணவர் கள் விடுதி மற்றும் அறை எடுத்து தங்கி உள்ளனர். அவர்கள் மத்தியில் போதைப்பொருளை ஒழிக்க அடிக்கடி போலீசார் மாணவர்களின் அறையில் சோதனை நடத்தி வருகின் றனர். மேலும் மாணவர்க ளுடன் வேறு யாரேனும், குற்றசம்பவங்களில் ஈடுபட் டவர்கள் தங்கி உள்ளார் களா? எனவும் பரிசோதிக் கின்றனர். தான் தங்கி இருக்கும் பகுதிகளில் கஞ்சா செடி வளர்த்த கல் லூரி மாணவர்களும் சில மாதங்களுக்கு முன்பு போலீசாரிடம் சிக்கி உள்ள னர். எனவே மாநகரில், அடிக்கடி போலீஸ் சோதனை, பாதுகாப்பு பணியை மேம்படுத்தி கைது நடவடிக்கை எடுத்தாலும், கஞ்சா விற்பனை, பெண் கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றச் சம்பவங் கள், கொலை, கொள்ளை குறைந்த பாடில்லை. தொடர்ந்து அதிகரித்து வரு கிறது. இது போலீசார் மீதான நம்பிக்கையை மக்க ளிடையே இழக்க செய்துள் ளது. மாநகரில் 5 மாதத்தில் மட்டும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்சம்பவங்களாக 155 வழக்குகள் பதிவாகி உள் ளது. மாதத்திற்கு 30 புகார் கள் வரை வந்துள்ளன.

தற்போது புதிய தவெக அரசு பொறுப்பேற்றவுடன் சிங்கப்பெண் சிறப்பு அதிர டிப்படை திட்டம் துவங்கப் படும் என அறிவித்தது ஆனால் இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வராமல் தொடர்ந்து இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகிறது. பெண்கள் மற்றும் சிறுமிகள் பாதுகாப்பில் அரசும், காவல்துறையும் தனிக்கவ னம் செலுத்துவதில் தற் போது வரை சுணக்கம் காட்டி வருவதாக குற்ற ச்சாட்டு எழுந்து வருகிறது. குறிப்பாக சமீபத்தில் சிறுமி கள் மீதான போக்சோ வழக் கும் அதிகளவில் பதிவாகி வருகிறது. இதுதவிர கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து கடந்த மே மாதம் வரை கோவை மாநகரில் 183 போதைப்பொருள் வழக்கு களில் 309 கிலோ கஞ்சா, 780 மில்லி கிராம் எம்டி எம்ஏ போதைப் பொருள், 2,113 போதை மாத்திரை. 264 கிராம் மெத்தாம்பிட்ட மின் போதைப் பொருள் மற்றும் 43 எல்எஸ்டி போதை ஸ்டாம்ப் போலீசா ரால் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

எனவே கோவை மாநகர போலீசார் பெண்கள் பாது காப்பு மற்றும் போதைப் பொருள் ஒழிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் வரையில், கடந்த 5 மாதத்தில் பெண் கள், குழந்தைகளுக்கு எதி ராக 235 குற்றச்சம்பவங்கள் பதிவாகி இருந்தது. இது இந்த ஆண்டு குறைந்துள் ளது. போதைப்பொருள் தடுப்பு மற்றும் பெண்கள் பாதுகாப்புக்கு முக்கியத்து வம் அளித்து நடவடிக்கை கள் எடுக்கப்பட்டு வருவ தாக காவல்துறை தரப்பில் தெரிவித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் சொத்து பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில் மாநகராட்சி மேயர் கா. ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட மாநில பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க ஆதி திராவிடர் நலக்குழு சார்பில் தலைவர் கலைஞரின் 103 வது பிறந்த தினத்தையொட்டி தலைவரின் திருவுருவப் படத்தை அலங்கரித்து வைத்து மாவட்ட அமைப்பாளர் அழகாபுரம் முரளி தலைமையில் இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. உடன் நிர்வாகிகள். தேவதாஸ் இளங்கோ வடிவேல், தங்கம். சுதா செல்வம் ஆசைத்தம்பி காமராஜ் ஆகியோர் இருந்தனர்.

# சட்டம் ஒழுங்குச் சீர்கேட்டால் தமிழ்நாடு சீரழிகிறது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜுன் 8-

சட்டம் ஒழுங்கு சீர்கேட்டால் த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாடு சீரழிந்து கொண்டுள்ளது என்று 'தினகரன்' நாளேடு தலை யங்கத்தில் கூறியுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் த.வெ.க. அரசு கடந்த மே 10ம் தேதி ஆட்சி பொறுப்பேற்றது. தேர்த லுக்கு முன் தி.மு.க.வை கடு மையாக விமர்சித்த விஜய், அந்த கட்சியோடு கூட்டணி அமைத்து, வெற்றி பெற்ற கட்சி களோடு சேர்ந்துதான் ஆட்சி நடத்தி கொண்டிருக்கிறார். இது போக, அமைச்சர் ஆசை காட்டி, அ.தி.மு.க.விலும் சலசலப்பை உருவாக்கி னார். அவரது பேச்சை நம்பி த.வெ.க. அர சுக்கு அதிருப்தி அ.தி.மு.க. எம். எல்.ஏ.க்கள் சிலர் ஆதரவு அளித்தனர். எதிர்பார்த்தபடி அமைச்சர் பதவியை யாருக் கும் தரவில்லை. இப்படியாக, தி.மு.க.கூட்டணியிலும், அ.தி. மு.க.யிலும் 'அரசியல் வினை யாட்டு' நடத்திக் கொண்டிருக் கும் வேளையில், தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு மிகப்பெரிய அளவில் சீரழிந்துக் கொண்டி ருக்கிறது.

குழந்தைகள், பெண்கள் மீதான பாதுகாப்பை உறுதி செய்யும் சிங்கப்பெண் அதிரடிப் படை திட்டத்திற்கு, ஆட்சிக்கு வந்த முதல்நாளே கையெழுத் திட்டார் முதல்வர் விஜய். ஆனால், தமிழ்நாட்டில் தினந் தோறும் பாலியல் குற்றங்கள் நடந்தவண்ணம் உள்ளன. கோவையில் 10 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப் பட்டு கொலையானது பேரதிர்ச் சிக்குள்ளாக்கியது. நடைப்ப யிற்சி சென்ற மூதாட்டி உட்பட இரண்டரை வயது சிறுமி வரை, பாலியல் சீண்டல்க ளுக்கு உள் ளாகி வருகின்றனர். விஜய் போட்டியிட்ட திருச்சி கிழக்கு தொகுதியிலே பாலியல் பலாத் காரம் சம்பவம் நிகழ்ந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியி ருக்கிறது.

18 வயதிற்குட்பட்ட சிறுமி களை பாருக்குள் அனுமதித் தது, அங்கு வந்த 2 இளம் பெண்களை கார் ஏற்றிக் கொலை செய்தது. நேற்று கூட திருப் புத்தூர் அருகே 10ம் வகுப்பு மாணவன் கழுத்த றுத்து கொலை என கடந்த 25 நாட்களில் 25க்கும் மேற்பட்ட கொலை சம்பவங்கள் நிகழ்ந் துள்ளன. வழிப்பறி, கொள்ளை சம்பவங்களும் அதிகரித் துள் ளன. மேலும், தவெக பிரமுகர் அரசு பஸ் டிரைவர் மீது கும்ப லாக சேர்ந்து, கொலைவெறி



தினகரன்

ஜுன் 6, 2026 சனிக்கிழமை

நீங்கள்தான் முதல்வர்...!

தமிழ்நாட்டில் தவெக அரசு கடந்த மே 10ம் தேதி ஆட்சி பொறுப்பேற்றது. தேர்தலுக்கு முன் திமுகவை கடுமையாக விமர்சித்த விஜய், அந்த கட்சியோடு கூட்டணி அமைத்து, வெற்றி பெற்ற கட்சிகளோடு சேர்ந்துதான் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். இதுபோக, அமைச்சர் ஆசை காட்டி, அதிமுகவிலும் சலசலப்பை உருவாக்கினார். அவரது பேச்சை நம்பி தவெக அரசுக்கு அதிருப்தி அதிமுக எம்எல்ஏக்கள் சிலர் ஆதரவு அளித்தனர். எதிர்பார்த்தபடி அமைச்சர் பதவியை யாருக்கும் தரவில்லை. இப்படியாக, திமுக கூட்டணியிலும், அதிமுகவிலும் 'அரசியல் விளையாட்டு' நடத்திக் கொண்டிருக்கும் வேளையில், தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு மிகப்பெரிய அளவில் சீரழிந்துக் கொண்டிருக்கிறது.

தாக்குதல் நிகழ்த்திய சம்பவங் களும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளன.

தமிழகத்தில் நடக்கும் இத் தனை குற்றச்சம்ப வங்கள் முதல்வரின் கவனத்திற்கு செல் கின்றனவா என தெரிய வில்லை. உங்களுக்கு அண் ணனாக, தம்பியாக என பிரசாரத்தில் பெண்கள் பாது காப்பு குறித்து கவலைப்பட்ட விஜய், முதல்வரானதும் அமைதி காப்பதன் மர்மம் புரிய வில்லை, இதை யெல்லாம் விட கொடுமையாக திருச்சியில் நடந்த நன்றி அறிவிப்பு கூட்டத் தில் பேசிய முதல்வர் விஜய், யார் ஆட்சியிலோ இந்த கொடு மைகள் நடப்பதாக எண்ணி பேசிவிட்டு சென்றது, நன்றி கூறும் கூட்டத்தில் பிரசார பாணி யில் பேசியதும் மக்களை பெரி யதாக கவரவில்லை.

விவசாயக்கடன் தள்ளுபடி என அறிவித்தது த.வெ.க. அரசு. முழுமையாக தள்ளுபடி செய்யாமல், கண் துடைப்பாக செய்ததாக கூறி, தமிழகமெங் கும் விவசாயிகள் இதனை எதிர்த்து போராடி வருகின்ற னர். த.வெ.க. கட்சி வேட்பா ளரே இதை எதிர்த்து பேசினார். இவையெல்லாம் அரசின் கவ னத்திற்கு செல்கிறதா? மூடப்படு வதாக அறிவித்த டாஸ்மாக் கடைகள் மீண்டும் செயல்படு கின்றன.

தேர்தல் பிரச்சாரத்தில் வெறும் ரீல்ஸ்களாக போட்டு பிர சாரம் செய்தீர்கள்... அது முடிந்து ரியலாக இப்போது ஆட் சியில் அமர்ந்தும் விட்டீர்கள். நீங்கள்தான் முதல்வர். இனி யாரையும் குறை கூறி பய னில்லை. சீரழிந்து கிடக்கும் சட்டம், ஒழுங்கை சரி செய்வ தற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். மாற்றம் தேவை என வாக்க ளித்த மக் களை, ஏமாற்றாதீர்கள். இனி யாவது. பிற கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்படுத்தும் தேர்தல் அரசியலில் ஈடுபடாமல், உங் களை நீங்களே கூறிக்கொள் ளும் 'தூய சக்தியாக', மக்களுக் கான அரசியல் சக்தியாக செயல் பட தொடங்குங்கள் என்பது தான் மக்களின் வலியுறுத்தல்.

இவ்வாறு அத்தலையங்கத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் 2025-26-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி

# 8.26லட்சம் ஈரநிலை மற்றும் நில வாழ்பறவைகள் உள்ளன!

## வனத்துறை செயலாளர் அறிவிப்பு!

சென்னை, ஜுன் 8-

தமிழ் நாடு அரசின் வனத்துறை செயலாளர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாடு வனத்துறை 2025 டிசம்பர் 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் தமிழ் நாடு ஒருங்கிணைந்த ஈரநில பற வைகள் கணக்கெ டுப்பை யும், 2026 பிப்ரவரி 14 மற்றும் 15 ஆகிய தேதிக ளில்தமிழ்நாடு ஒருங்கி ணைந்த

நிலவாழ் பறவைகள் கணக்கெடுப்பையும், வனத் துறைஅதிகாரிகள், பறவை நிபுணர்கள், தன்னார்வலர் கள்மற்றும் பறவை பார்வை யாளர்களின் தீவிர பங் கேற்புடன் நடத்தப் பட்டது. இதில் ஏரிகள், பாசனக் குளங்கள், சதுப்பு நிலங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் பிற முக்கிய நீர்நி லைகள் அடங்கும்.

இந்த ஆய்வின்போது, ஈரநிலச் சூழலமைப்பு களு டன் தொடர்புடைய மொத்தம் 393 பறவை இனங்கள் பதிவுசெய்யப் பட்டன. நேரடி எண்ணிக் கையில் 6,01,348 பறவைகள் கணக்கிடப்பட் டன. இவற் றில் 116 இனங் கள் நீர்ப்பற வைகளாகவும், 131 இனங் கள் வலசைப் பற வைகளா கவும் இருந்தன. அவற்றின் மொத்த எண் ணிக்கை 1,59,557 ஆகும்.

பொதுவாக பதிவான இனங்களில் லிட்டில் கார் மரண்ட், குளோஸ்ஸி ஐபிஸ், லிட்டில் எக்ரெட், ஈஸ்டர்ன் கேட்டில் எக் ரெட், இந்தியன் பாண்ட் ஹெரான், நார்தர்ன் பின் டெயில், லிட்டில் ஸ்டின்ட், கிரேட்டர் பிளாமிங்கோ மற்றும் கார்கனே ஆகியவை அடங்கும். மேலும், IUCN சிவப்பு பட்டியலில் அச்சுறுத்தப்பட்ட பிரிவு களில் உள்ள 35 பறவை இனங்கள் ளின் இருப்பும் இந்த கணக் கெடுப்பில் பதிவுசெய்யப் பட்டது.

ஒருங்கிணைந்த நில வாழ் பறவைகள் கணக் கெடுப்பு, தமிழ்நாட்டின் அனைத்து 38 மாவட்டங் களிலும் உள்ள காடுகள் மற் றும் நிலவாழ் சூழலமைப்பு களை உள்ளடக் கிய 1108 நிலவாழ் பறவை கணக்கெ டுப்பு இடங்களில் நடத்தப் பட்டது. மொத்தம் 391 பறவை இனங்கள் பதி செய் யப்பட்டு நேரடி எண்ணிக் கையில் 2,24,801 பறவைகள் கணக்கிடப்பட் டன.

இவற்றில் 228 இனங் கள் உள்ளூர் பறவைக ளாகவும், 72 இனங்கள் வலசை பற வைகளாகவும் இருந்தன. இந்த கணக்கெ டுப்பில் பதி வான முக்கிய பறவைகள் இனங்களில் நாப்பில்ட்டக், காட்டன் பிக்மி கூஸ், கார் கனே, நார் தர்ன் ஷோவ லர், யூரேஷியன் விஜியன், நார்தர்ன் பின்டெயில், ரெட் ஸ்பார்ஃப வுல், பெயிண்டெட் புஷ் கொய்ல், நீலகிரி மர புறா, ஓரியண்டல் டார்டில்டவ், ஏஷியன் மரகதபுறா, கிரீன் இம்பீரியல் புறா, மலபார் இம்பீரியல் புறா மற்றும் இலங்கை ப்ராக்மவுத் ஆகி யவை அடங்கும்.

ஈரநிலச் சூழலமைப்பு கள், காடுகள், கடலோர வாழிடங்கள், கழிமுகங்கள், மாங்குரோவ் காடுகள், நீர்த் தேக்கங்கள் மற்றும் ஆயிரக் கணக்கான பாசனக் குளங் கள் ஆகியவற்றின் இருப்பி னால் தமிழ்நாடு வளமான பறவைகள் பன் முகத்தன்மையை ஆதரிக்கி றது. இவை பறவைகளுக்கு உணவளிப்பு, இனப்பெருக் கம் மற்றும் ஓய்வு எடுக்கும் முக்கிய வாழிடங்களாக விளங்குகின்றன.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி, சூலூர் தெற்கு ஒன்றிய தி.மு.க., சூலூர் நகர தி.மு.க. இணைந்து நடத்திய "வீழ்வோம் என்று நினைத்தாயோ கருத்தரங்கம் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) சுதாகர் வரவேற்புரையில் சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், கோவை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பசுமை நிழல் சூ.ஆ.விஜயகுமார், சூலூர் நகர கழக செயலாளர் சு.கவுதமன் முன்னிலையில் நடைபெற்றது. மாநில கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை ந.கௌதமன் கருத்துரையாற்றினார். இதில் மாணவிகளுக்கு முதலாம் ஆண்டு கல்லூரியில் சேர ரூபாய் 60 ஆயிரம் கல்வி உதவித் தொகை வழங்கினர். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் பீடம்பள்ளி சுரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ், சூலூர் பேரூராட்சி தலைவர் தேவி மன்னவன், துணைத் தலைவர் சோலை ப.கணேஷ், முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் சூ.ஆ.ஜெகநாதன், மாவட்ட வர்த்தக துணைத் தலைவர் சூ.அ.செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.